**தலைப்பு 130 – பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 130 – பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் போதிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2013 யூலை 12 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதிசாராச் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்குப் பதிலாக ரூபா 100 பெயரளவுப் பெறுமதியான 3,812 பொருட்களும் மேலும் 221 சொத்து அலகுகளின் பெறுமதி | "சிகாஸ்" தரவு முறைமைக்கு உள்ளடக்கப்பட்ட பெயரளவுப் பெறுமதி ரூபா 100 ஆன பொருட்களும் பெறுமதியற்ற பொருட்கள் குறிப்பிடத்தக்க அளவில் முறைமையில் உள்ளதுடன் இது 2017 | நிதி சாரா சொத்துக்களின் சரியான மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இன்றியும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.<br><br>மேலும், 2020 – 2023 காலப்பகுதியின் போது அலுவலக உபகரணங்கள் கழிக்கப்பட வேண்டிய பொருட்களாக கைதவிர்க்கப்பட்டிருந்த போதிலும், ‘‘சிகாஸ்’’ தரவு முறைமைக்குத் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆம் ஆண்டின் பெறுமதியை சரியாக உறுதிப்படுத்துவதற்கு இயலாதிருந்ததன் காரணமாக முறைமையில் உள்ளடக்கப்பட்ட தரவுகளாகும். எனினும், 2023 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்விற்கு இணையாக மேற்கொள்ளப்பட்ட பொருள் பெறுமதியிடலின் போது இனங்காணப்பட்ட பொருட்களும் பெறுமதியிடப்பட்ட பெறுமதியும் ‘‘சிகாஸ்’’ தரவு முறைமைக்கு தற்போது உள்ளடக்கப்பட்டு வருகின்றது. மேலும், 2020 – 2023 காலப்பகுதிக்கு உரித்தாக கைதவிர்க்கப்பட்ட பொருட்களின் பெறுமதியும் இச் செயற்பாட்டின் மூலம் சீராவதுடன் நிதி சாரா சொத்துக்கள் தொடர்பாக ‘‘சிகாஸ்’’ தரவு முறைமையும் இதன் மூலம் சீராக்கப்படும். | |
| **(ii)** | அமைச்சின் கீழ் உள்ள ரூபா 746,550,000 பெறுமதியான 42 உத்தியோகபூர்வ இல்லங்களின் சுற்றுலா விடுதிக் கட்டிடங்களின் கீழும், தியத்தலாவை சுற்றுலா விடுதிகள் இரண்டின் ரூபா 14,601,000 பெறுமதி பண்டாரவளை சுற்றுலா விடுதிக் கட்டிடக் கணக்கின் கீழும் கணக்கிடப்பட்டிருந்தமையால் வகைப்படுத்தலில் தவறு நிலவியது | அரச கணக்குகள் திணைக்களத்துடன் இணைந்து நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் நிதிசாரா சொத்துக்களின் வகைப்படுத்தலைச் சீராக்குவதாக தயவுடன் அறிவிக்கின்றேன். | நிதிக் கூற்றுக்களில் நிதிசாராச் சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 20.02.01.01 வருமானக் குறியீட்டிற்கு உரித்தான மொத்த கட்டிடங்கள் என்ன என்பதனை இனங்கண்டு கொள்வதற்காக தரவு முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 மே 30 ஆம் திகதி வரையிலும் சகல கட்டிடங்களும் தரவு முறையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இது வரையில் வருமானக் குறியீடு 20.02.01.01 இன் கீழ் இவ் அமைச்சிற்கு உரித்தான கட்டிடங்கள் வகைப்படுத்தப்பட்டு இனங்காணப்படக் கூடிய வகையில் தரவு முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலக அலுவலகங்களிற்கு உரித்தான கட்டிடங்கள் அனைத்தும் தரவு முறைக்கு உள்ளடக்கப்பட உள்ளன. | தரவு முறைமை விரைவாகத் தயாரிக்கப்பட்டு உரிய வருமானக் குறியீட்டின் கீழ் கட்டிட வாடகை, அரச வருமானத்திற்குச் செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கைச் சுற்றறிக்கையின் 4 (ஆ) பந்தியின் பிரகாரம், வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிலுவை வருமானம் சேகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறவிடுவதற்கு உள்ள நிலுவை வருமானத்தை மேலும் மேலும் சேர்வதனைத் தடுப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 32 நிறுவனங்களிடம் இருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கட்டிட நிலுவை வாடகை வருமானத் தொகையான ரூபா 332,724,629 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 198,688,576 தொகை 2020 திசெம்பர் 31 இற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. இந் நிலுவை வாடகைத் தொகையில் இருந்து 18 சதவீதமான அதாவது ரூபா 59,142,348 தொகை இவ் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் | 2023.12.31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வருமானத்தில் 2024.03.31 இல் உள்ளவாறு ரூபா 54,837,957.62 தொகை அறவிடப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் போது நிலுவை வருமானம் ஏற்படுவதற்கான காரணமாக கடிதங்கள் பெறப்படுவதிலான தாமதம் மற்றும் காசோலைகள் பெறப்படுவதிலான தாமதம் முக்கியமாகக் குறிப்பிட முடியும். கடிதத்தின் மூலம் அறிவிக்கப்படுவது, குறித்த நிறுவனங்களின் பங்களிப்புடன் நிலுவை வருமானத்தின் முன்னேற்றத்தின் மீளாய்வு மற்றும் தொலைபேசி மூலமான தொடர்ச்சியான பின்தொடர்பு மூலம் அறவிடப்படுவதற்கு உள்ள நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான | நிலுவையான வீட்டு வாடகையை அறவிட்டுக் கொள்வதற்கும் நிலுவையான வாடகை மேலும் சேர்வதனைத் தவிர்ப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரச விடுதிகள், சுற்றுலா விடுதிகள் மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகளில் இருந்து அறவிடப்பட வேண்டியவையாகக் காணப்பட்டன. | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 56 அமைச்சர்களிடமிருந்தும் உறுப்பினர்களிடம் இருந்தும் ரூபா 3,687,360 தொகையான நிலுவை வாடகைத் தொகை அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டதுடன் அம் மீதியில் 2015 ஆம் ஆண்டில் இருந்து நிலவி வரும் ரூபா 1,368,920 தொகையான 19 மீதிகள் காணப்பட்டன. | 2024.05.20 ஆம் திகதி வரையில் அமைச்சர்களினதும் உறுதிப்பினர்களினதும் நிலுவையான விடுதி வாடகைத் தொகை ரூபா 3,593,870 ஆகும். | தொடர்ந்து பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவை வாடகையை அறவிட்டுக்கொள்வதற் கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 35 கூட்டமைப்பு வீடுகளில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,292,702 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் இதில் ரூபா 2,025,801 தொகை 2012 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான 10 ஆண்டு காலத்திற்கு உரித்தாக மேலும் அறவிடப்படாது நிலவும் நிலுவை மீதியாகும். மேலும் ஜயவடனகம வீடுகளில் 2012 முதல் 2021 ஆம் ஆணடு வரையான காலப்பகுதியில் குடியிருக்கு 18 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட தொகையில் ரூபா 8,790,490 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2024.05.20 ஆம் திகதி வரையிலும் அறவிட வேண்டிய நிலுவையான வீட்டு வாடகைத் தொகை ரூபா 2,292,702.45 ஆகும். இதில் 2012 முதல் 2022 ஆம் ஆண்டு வரை நிலவிய நிலுவைத் தொகையில் இது வரையில் நிலவிய நிலுவைத் தொகை ரூபா 2,025,801.07 ஆகும். ஜயவடனகம வீடுகளில் இருந்து 2024.05.20 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலையில் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 8,790,490.46 ஆகும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த ஓர் விடுதியில் இருந்து 2012 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 28,567,470 தொகையான மீதியும் நெடுங்கால சிறுநீரக நோய்த் தடுப்பு ஆராய்ச்சிச் செயலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஓர் விடுதியில் இருந்து 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரித்தாக அறவிடப்பட வேண்டியிருந்த தொகையில் ரூபா 4,798,387 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த விடுதியில் இருந்து 2012 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 28,567,470.00 தொகை தொடர்பாக இது வரையில் அரச நிதி திணைக்களத்துடனும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெடுங்கால சிறுநீரக நோய்த் தடுப்பு ஆராய்ச்சிச் செயலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த விடுதியில் இருநதான எஞ்சிய நிலுவைத் தொகை இவ் ஆண்டின் போது அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | -மேற்படி- |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 16 மூலதன செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 112,450,000 தொகையான மொத்த மதிப்பீட்டு ஏற்பாட்டுத் தொகையும் 08 மீண்டெழும் செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 9,320,000 தொகையான மொத்த மதிப்பீட்டு ஏற்பாட்டுத் தொகையும் எஞ்சியிருந்தன. | N - Leep செயற்திட்டம் பூர்த்தியடைந்தமை மற்றும் மூடப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தி செயற்பாட்டு அணித் திணைக்களத்திடம் இருந்த வளங்களைப் பயன்படுத்தியமை, கட்டுநிதி விடுவிக்கப்பட்டிராமை, பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமற்ற காரணத்தினால் இயந்திரத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிராமை, 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம், சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் | நிதிப் பிரமாணம் 50 (ii) இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இடைநிறுத்தப்பட்டமை, செயலமர்வுகள் Zoom தொழிநுட்பத்தின் மூலம் மேற்கொள்ளப்படல், திட்டமிடப்பட்டவாறு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ள இயலாது போனமையால் மூலதன ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன.<br><br>வெளிநாட்டுப் பயண வாய்ப்புகள் கிடைக்கப்பெறாமை, திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமை, மாவட்ட தொடர்பாடல் நடவடிக்கைகளிற்காகச் செலவுகளை ஏற்க நேரிடாமை, பொதுநலவாய சபையின் உள்ளூராட்சிக் குழு அங்கத்துவக் கட்டணம் செலுத்தப்படாமையால் மீண்டெழும் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. | |
| (ஆ) | 17 மூலதன செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 692,950,000 தொகையான ஏற்பாட்டுத் தொகையில் 80 சதவீதத்திற்கும் மேலாக அதாவது ரூபா 553,273,789 தொகை எஞ்சியிருந்ததுடன் அத்தகைய ஒவ்வொரு செலவின விடயங்களினது சேமிப்புகளின் சதவீதம் 50 முதல் 94 சதவீத வீச்சில் காணப்பட்டன. | 03/2022, 01/2023, 02/2023 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டமை, திருத்த வேலைகள் கட்டுப்பாடு மற்றும் N - Leep செயற்திட்டம் பூர்த்தியடைந்தமை மற்றும் மூடப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தி செயற்பாட்டு அணித் திணைக்களத்திடம் இருந்த வளங்களைப் பயன்படுத்தியால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. | -மேற்படி- |
| (இ) | 09 மீண்டெழும் செலவின விடயத்திற்காக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த ரூபா 116,265,000 கூட்டுத்தொகையான ஏற்பாட்டுத் தொகையில் 25 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் ரூபா 45,665,861 உம், 03 மூலதன செலவின விடயங்களிற்காக | செலவின விடயங்களின் ஏற்பாடு போதாமையால் மேலதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மேலதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் செலவினங்கள் வேறு செலவின விடயங்களின் கீழ் | திட்டமிட்டு ஏற்பாடுகள் மாற்றப்பட்டு அவற்றைச் செலவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றப்பட்டிருந்த ரூபா 4,539,000 கூட்டுத்தொகையான ஏற்பாட்டுத் தொகையில் 35 சதவீதத்திற்கும் 79 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் ரூபா 2,265,722 உம் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தன. | மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக ஏற்பாடுகள் மாற்றப்பட்ட செலவின விடயங்களின் ஏற்பாடுகள் எஞ்சின. | |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொது நிர்வாக பிரிவின் மூலதனச் செலவினம் அடங்கலாக 10 செலவின விடயங்களிற்காக பொறுப்புக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த பொறுப்பின் அளவு ரூபா 206,179 ஆகக் காணப்பட்ட போதிலும் அப் பொறுப்புகளுக்கு உரிய 2024 சனவரி 01 முதல் மார்ச் 31 வரையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் செலவினம் ரூபா 1,018,145 ஆகக் காணப்பட்டது. இவ்வாறே சுதேச அலுவல்கள் பிரிவின் 2024 சனவரி – மார்ச் மாதங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 297,826 தொகையான பொறுப்புக்கள், பொறுப்புக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் பிறகு அத்தகைய தவறுகள் நேராத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | பொறுப்புகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கும் திறைசேரிக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தான ‘‘பிபிதெமு பொலொன்னறுவை நிகழ்ச்சித்திட்டம்’’ இற்காக பொலொன்னறுவை மாவட்டச் செயலாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு அமைச்சால் வழங்கப்பட்ட தகவல்களுடன் ஒப்பிடுகையில் ஆரம்ப மீதிகளில் முறையே ரூபா 1,797,528,618 தொகையும், ரூபா 52,102,401 தொகையும், (ரூபா 533,242,982) தொகையும் ரூபா (ரூபா 13,541,087,251) | 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பொறுப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பொலொன்னறுவை மாவட்டச் செயலாளர் அலுவலகத்திடம் தகவல்கள் கோரப்பட்டுள்ளன. பதில் கிடைக்கப்பெற்றதை உடனடுத்து சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்கின்றேன். | பொறுப்புகள் சரியாக கணக்கிடப்படுவதற்கும் திறைசேரித் தகவல்களுடன் ஒப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையுமாக வேறுபாடு நிலவியது. அம் மீதிகளின் வேறுபாட்டிற்கான காரணம் கண்டறியப்பட்டு சீராக்கப்பட்டிருக்கவில்லை. | | | |

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 1.1 மற்றும் 1.2 ஆம் பிரிவுகள் | பதவிகளிற்காக விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டு பட்டிடலிடப்படக் கூடியதுடன் 2003 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 11/2003 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையினால் இவ் அமைச்சிடம் பட்டியற்படுத்தப்பட்ட வீடுகள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், தாபனவிதிக் கோவைக்கும் இச் சுற்றறிக்கைக்கும் முரணாக அமைச்சின் அங்கீகாரத்தில் 06 பொது வீடுகளும் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் 16 பொது வீடுகளும் பட்டியலிடப்பட்டு வழங்கப்பட்டிருந்தன. | சேவைத் தேவைப்பாடு மற்றும் விதிவிலக்கான காரணங்களைக் கருத்திற்கொண்டு தாபன விதிக் கோவையின் தேவைப்பாடுகளிற்கு இணங்க குறித்த பதவிக்காக இவ் அமைச்சிற்கு உரிய உத்தியோகபூர்வ வீடுகள் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் பட்டியற்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் அமைச்சின் வீடுகள் ஒதுக்கப்படுவதற்காக பட்டியல்கடுத்தப்பட்ட பதவிகள் ஏற்படுத்தப்படுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நிதிப் பிரமாணம் 104 | • நட்ட இழப்புகள் ஏற்பட்ட நாளில் இருந்து மூன்று மாதங்களிற்குள் ஓர் முழுமையான | விபத்தினால் ஏற்பட்ட நட்ட இழப்புக்களைத் திருத்துவதற்காக எடுக்கும் காலம் நீடித்தமை, | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பொது நிர்வாகப் பிரிவின் 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக அத்தகைய ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விபத்திற்காக வழக்குத் தொடரப்பட்டிருந்தமை மற்றும் பொலிஸ் அறிக்கை தாமதமானமை போன்ற காரணங்களால் சில வாகனங்களிற்காக முழுமையான அறிக்கை 03 மாதகாலத்திற்குள் சமர்ப்பிக்க முடியவில்லை. | |
| | | • தொடர்ந்து அமைச்சரவை அலுவலகத்தின் பொருள் மெய்மையாய்வின் போது பற்றாக்குறையாக இனங்காணப்பட்டிருந்த 257 வகையான சொத்து வகைகள் தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குழு ஒன்று நியமிக்கப்பட்டு இதன் படி மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | -மேற்படி- |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 06 மாதங்களிற்கு ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு குறித்துப் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சிடம் உள்ள 88 வாகனங்களிற்கும் அவ் ஆய்வு அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது எரிபொருள் ஆய்வு மேற்கொள்ளப்பட இயலாது போன போதிலும் 2024 ஆம் ஆண்டிற்கான எரிபொருள் ஆய்வு மேற்கொள்ளப்படும் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 செப்தெம்பர் 09 ஆம் திகதிய 10/22 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை | பொது நிர்வாகப் பிரிவில் ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்த ஓர் மோட்டார் வாகனம் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி மற்றும் உள்நாட்டலுவல்கள் பிரிவினூடாக வாகனம் தேவையான வேறு உள்ளூராட்சி நிறுவகம் ஒன்றிற்கு அம் மோட்டார் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | வாகனம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பணி மேற்கொள்ளப்பட்டிராமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | எல்லை நிர்ணயத்திற்காக முதலாவது அமைச்சரவைத் தீர்மானம் வழங்கப்பட்டு இரு ஆண்டுகளும் இரண்டாவது அமைச்சரவைத் தீர்மானம் வழங்கப்பட்டு ஒரு வருடமும் கடந்திருந்தது. 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது இதற்காக ரூபா 7,760,180 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் தொடர்பாடற் குழு அங்கீகாரத்துடன் விபரமான இறுதி அறிக்கை அமைச்சரவைக்கு 2024 மே 30 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021.05.21 ஆம் திகதி வரையில் 16 மாவட்டங்களின் தொடர்பாடற் குழுக்களின் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய மாவட்டங்களால் குழுப் பரிந்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2023 ஆம் ஆண்டின் போது நாட்டில் ஏற்பட்ட அரசியல் புரட்சிச் சூழலில் மாவட்டத் தொடர்பாடற் குழுக்கள் கூட்டப்படுவதில் சில சிக்கல்கள் நிலவியதாகவும் அதன் காரணத்தால் தொடர்பாடற் குழு நடவடிக்கைகள் தாமதமாகி உள்ளதாகவும் மாவட்டச் செயலாளர்களால் அவ் அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதை அடுத்து சகல மாவட்டங்களினது தொடர்பாடற் குழுப் பரிந்துரைகளுடன் எல்லைகள் நிர்ணயக் குழுவினால் வழங்கப்பட்ட இறுதி அறிக்கை கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தின் படி அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். | எல்லை நிர்ணயக் குழு அறிக்கைகளை விரைவாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எய்த வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (ஆ) | 2021 செப்தெம்பர் 14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, எல்லை நிர்ணயக் குழு அங்கத்தவர்களுக்காக ஓர் கொடுப்பனவை மேற்கொள்வது நியாயமானதெனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் உதவிப் பணியாட்களுக்கான கொடுப்பனவை வழங்குவது அரச நிறுவனங்களது பொறுப்பு எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், குழுக் கூட்ட அமர்வுச் செலவினத்தில் உதவிப் பணியாட்களிற்கான ரூபா 914,500 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | அவ் அமைச்சரவைத் தீர்மானத்தில் 5(iv) ஆ (ii) இன் படி, மதிப்பிடப்பட்ட செலவினத்தை இயன்ற அளவு குறைக்குமாறு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் படி ஆகக் குறைந்த உதவிப் பணியாட்களுக்காக கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் திாமானத்திற்கமைவாகச் செயற்பட வேண்டும். |

### 3.2 வெளிநாட்டு உதவித் செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | யாழ்ப்பாணத்தின் இன்கியுபேட்டர் (Incubator) ற்காக வியாபார மத்திய நிலையம் ஒன்றை செயற்படுத்துவதற்காக மூலதன செலவின விடயத்தின் கீழ் வெளிநாட்டு மானியத்தின் மூலம் ரூபா 250,000,000 தொகையும் வெளிநாட்டு நிதியீட்டல் செலவு விடயத்தின் கீழ் ரூபா 50,000,000 தொகையுமாக ரூபா 300,000,000 தொகையான ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 490,955 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போதும் இச் செயற்திட்டத்தைச் | உசாவுகைச் செயற்பாடுகளிற்காக பெறுகைக் கம்பனியின் முடிவுகள் (Deliverable) கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அக் கம்பனிக்காக இதுவரையில் ரூபா 429,000 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 8.15 மில்லியன் தொகையைச் செலுத்துவது தொடர்பிலான பரிந்துரைக்காக நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழு இது வரையில் உறுதியான பரிந்துரைகளை சமர்ப்பித்திருக்கவில்லை.<br><br>செயற்திட்டத்தின் இரண்டாவது செயற்பாடான பரிந்துரைக்கப்பட்ட நிலையத்திற்கான கட்டிடத்தை மறுசீரமைப்பது தொடர்பாக கட்டிடங்களைத் தேர்ந்தெடுக்கையில் | வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒதுக்கங்கள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் உச்ச மட்டத்தில் உபயோகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 240,000,000 தொகையான ஒட்டு மொத்த ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே 03 வருடங்களிற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கை 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி முடிவுற்றிருந்த போதிலும் செயற்திட்டம் பூர்த்தியடைந்திருக்கவில்லை. | யாழ்ப்பாண நகரத்தில் நிலவும் கட்டிடப் பற்றாக்குறை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.<br><br>இலங்கை அரசாங்கத்தால் ஏற்ற கட்டிடம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு ஏனைய தேவைப்பாடுகள் பூர்த்தியானதை அடுத்து புதிதாக இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடுவது தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் 03 ஆவது பகுதியை நடைமுறைப்படுத்துவதற்காக மூலதனச் செலவினத்தின் கீழ் ஐரோப்பிய முதலீட்டு வங்கிக் (ஈஐபீ) கடனின் மூலம் ரூபா 947,034,807 தொகையும் வெளிநாட்டு நிதித்திட்டச் செலவு விடயத்தின் கீழ் ரூபா 380,000,000 தொகையான ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் பெறுகை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படுவதில் தாமதமான காரணத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒட்டுமொத்த ஒதுக்கமும் சேமிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் இது வரையில் மேற்கொள்ளப்பட்டு ஒரு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்கான ஆலோசனைச் சேவைகளிற்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. எஞ்சிய ஒப்பந்தத்தை வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | -மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கிராமிய பாலங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ஐக்கிய இராச்சியக் கடனின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 200,000,000 ஒதுக்கங்கள் முற்றாக எஞ்சியிருந்தன. ஓப்பந்தத்தில் நிலவிய சிக்கல் காரணமாக ஒப்பந்தக்காரருக்கு பிடிமானப் பணத்தை விடுவிக்கப்பட்டிராமை சேமிப்பிற்கான காரணமாகும். | ஒப்பந்தக்காரர் மூன்றாம் தரப்பினருடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியிருந்தமையால் பிடிமானப் பணத்தை விடுவிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | -மேற்படி - |
| (ஈ) | கழிவுகளுக்கு பெறுமதியொன்றை சேர்க்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜேர்மன் அரசின் உதவியின் கீழ் ரூபா 260,000,000 தொகையும் வெளிநாட்டு நிதி உதவிச் செலவு விடயத்தின் கீழ் ரூபா 15,000,000 தொகையுமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 275,000,000 தொகையான ஒட்டு மொத்த ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த நிர்மாணத்திற்காக ஒப்பந்த நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படும் நடைமுறையேனும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. | 04 கழிவு மீள்சுழற்சி நிலையங்களை நிர்மாணிப்பதற்காக குறித்த திட்டங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இவ்வாறே குறித்த நிர்மாணிப்புகளிற்காக ஒப்பந்த நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>இச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு செயற்திட்டத்தின் உள்நாட்டு வரித் தொகையைத் தீர்ப்பதற்காக பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக ஒதுக்கம் சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி - |

## 3.3 உள்நாட்டு நிதியுதவித் திட்டங்களிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **ஈ - கிராம உத்தியோகத்தர் செயற்திட்டம்** | | |
| (i) | ஈ - கிராம உத்தியோகத்தர் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,500,000,000 ஒதுக்கங்களில் ரூபா 1,462,605,112 எஞ்சியிருந்ததுடன் திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிராததன் காரணமாக 2017 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து ஒதுக்கம் சேமிக்கப்பட்டிருந்தது. | ஆகக் கூடுதலான பணத்தொகையான ரூபா 1,028.5 மில்லியன் 2 in 1 வகையிலான வலையமைப்பு கணனியைப் பெற்றுக்கொள்வதற்காகவே ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திறந்த நிலையில் காணப்பட்ட மூல பெறுகை முறையாக இரத்துச் செய்யப்பட்டு மாற்று நடவடிக்கைக்குச் செல்லும் படி பரிந்துரைக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்புத் தொடர் நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட இயலாதிருந்தமையால் ஒதுக்கம் பயன்படுத்தப்படாதிருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கங்கள் திட்டமிடப்பட்டதன் படி குறித்த பணிகளுக்காக உபயோகப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்திற்கு உரிய பிரசார மற்றும் தொடர்பாடல் தேவைப்பாட்டை ஈடுசெய்வதற்கான செயற்பாட்டை மேற்கொள்வதற்காக பெறுமதி சேர் வரி இன்றி ரூபா 25,762,474 இற்கு விளம்பர நிறுவனமொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை நடைமுறை வழிகாட்டல் கோவையின் 8.9.1 ஆம் அத்தியாயத்தின் படி முறையான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2008/12/18 ஆம் திகதிய 08/2253/338/043 மற்றும் 2010.08.04 ஆம் திகதிய 10/1682/407/014 ஆம் இலக்க 02 அமைச்சரவைத் தீர்மானங்களுக்கமைய சகல அரச நிறுவனங்களும் தமது பிரசார நடவடிக்கைகளை பெறுகை நடைமுறைகளற்ற முறையில் ‘‘சலெசினே’’ நிறுவத்தின் மூலம் மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டதை அடுத்து ஈ - கிராம உத்தியோகத்தர் செயற்திட்டத்தின் தொடர்பாடல் மற்றும் பிரசார தேவைப்பாடுகள் வெகுசன அமைச்சின் கீழுள்ள ‘‘சலெசினே’’ நிறுவத்திற்கு வழங்கப்பட்டு இதன் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | பெறுகை நடைமுறை வழிகாட்டல் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பெறுகை நடைமுறை வழிகாட்டல் கோவையின் 5.4.4 (1) ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவு பிணையாக ஒப்பந்தத் தொகையில் ஆகக் கூடுதலாக 20 சதவீதம் வரை முற்பணமாகச் செலுத்தக் கூடிய போதிலும் கொடுப்பனவிற்கான பிணை சமர்ப்பிக்கப்படாதிருந்த போதிலும் உடன்படிக்கையிடப்பட்ட தொகையில் 50 சதவீதமான உயர் பெறுமதி முற்பணமாக ரூபா 13,911,736 பெறுமதி சேர் வரியுடன் சேர்த்து அந் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | ''சலெசினே'' நிறுவத்திற்கு செலுத்தப்பட்டிருந்த 50 சதவீதமான முற்பணத் தொகைக்கு சதவீத அளவிலான செயற்பாட்டிற்கு உரிய பூர்த்தியின் மூலம், இம் முற்பணத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | -மேற்படி- |
| (ஆ) | காலி மாவட்டத்தில் 2000 இருக்கை வசதிகளுடனான கேட்போர் கூடிமொன்று நிர்மாணித்தல். | | |
| (i) | இச் செயற்திட்டத்திற்காக 2019 – 2020 ஆம் காலப்பகுதியின் போது ரூபா 2,700,000,000 தொகையான ஒதுக்கங்கள் வழங்கப்பட்டிருந்தது டன் 2023 யூன் 14 ஆம் திகதி வரையிலும் ரூபா 718,599,241 தொகை செலவிடப்பட்ட பின்னர் நிர்மாணிப்பு வேலைகள் கைவிடப்பட்டிருந்தன | அரசியலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இது தொடர்பாக எதிர்பார்க்கத்தக்க ஈடுபாடு நேராமையால் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி சீராகும் வரை இந் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதற்கு நேரிட்டுள்ளது. | செலவிடப்பட்ட செலவினம் விளைவற்ற செலவினமாவதற்கு இடமளிக்காது நிர்மாணிப்பு வேலைகளை ஆரம்பித்து கேட்போர் கூட நீர்மாணிப்பு நோக்கை நிறைவேற்ற வேண்டும். |
| (ii) | குறித்த கேட்போர் கூடம் நிர்மாணிப்பது தொடர்பாக 2022 பெப்ரவரி 15 ஆம் திகதி காலாவதியான ரூபா | 2024 பாதீட்டின் மூலம் இந் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக ரூபா 500 மில்லியன் தொகையான ஒதுக்கங்கள் ஏற்பாடு | சேயற்பாட்டு முறியினதும் முற்பண முறியினதும் கால நீடிப்பை மேற்கொள்ள வேண்டும். |

| | |
|---|---|
| 132,843,884 ஆன செயற்பாட்டு முறி ஒன்று காலம் நீடிக்கப்படுவதற்கோ அல்லது காசாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் மீள அறவிடப்படாத ரூபா 475,358,225 முற்பணத் தொகையும் காணப்பட்டது. | செய்யப்பட்டுள்ளது. நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்காக தேவையான எஞ்சிய ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்படுவதற்காக அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்படுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொது நிர்வாகப் பிரிவினதும் உள்நாட்டு அலுவலகள் பிரிவினதும் கீழ் இயங்கும் 46 சுற்றுலா பங்களாக்களிற்கு உரிய காணிகளின் உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | காணிகளைக் கையேற்பதற்கான நடவடிக்கைகள் இது வரையில மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சொத்துக்களின் உரிமையையும் நிலைப்பாட்டையும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட எனினும் வாகனப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிராத எனினும் பௌதீக ரீதியாக இல்லாத 04 வாகனங்கள் வேறு எந்த நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளதென்பது குறித்து உறுதிப்படுத்தப்படுத்த இயலாதிருந்தது. இவ்வாறே தங்காலை பிரதேச சபையால் பயன்படுத்தப்படும் கப் வண்டி அப் பிரதேச சபைக்கு முறைப்படி ஒப்படைக்கப்படவோ அல்லது மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கோ 05 ஆண்டு காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 04 வாகனங்கள் தொடர்பாக தற்போதைய உரிமையாளர் தொடர்பாக ஆராய்வதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதன் படி, அவ் வாகனம் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். 252 – 6507 ஆம் இலக்க வாகனம் தங்காலை பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்படுவது தொடர்பாக மறுப்பு இல்லை என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் விதி XVIII ஆம் பிரிவின் 247 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் எய்தப்படும் விதத்தில் ஒன்றிணைந்த மற்றும் நாடளாவிய சேவை உத்தியோகத்ர்களின் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிரா ததுடன் கட்டாய இடமாற்றங்களிற்கு உரித்தான உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றக் கொள்கைகள் முறைப்படி செயற்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | இலங்கை நிர்வாக சேவையில் விண்ணப்பங்கள் அனுப்பிவைத்த 278 உத்தியோகத்தர்களில் 78 பேரும், இலங்கை கணக்காளர் சேவையில் விண்ணப்பங்கள் அனுப்பிவைத்த 281 உத்தியோகத்தர்களில் 92 பேரும், இலங்கை திட்டமிடல் சேவையில் விண்ணப்பங்கள் அனுப்பிவைத்த 43 உத்தியோகத்தர்களில் 27 பேரும் மாத்திரம் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். | நிறுவனங்களின் கடமைத்தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் எந்தத் தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ளக் கூடிய இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, சனாதிபதி அலுவலகம், பிரதம மந்திரி அலுவலகம், அமைச்சரவை அலுவலகம் ஆணைக்குழுக்கள் மற்றும் மாகாண சபை உத்தியோகத்தர்கள் குறித்த நிறுவனத்தின் விசேட அங்கீகாரமின்றி இடமாற்றம் செய்யப்பட இயலாது. | நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடையும் வகையிலும், ஒரே பணியிடத்தில் நீண்ட காலமாக இருப்பதற்கான வாய்ப்பை நீக்கும் வகையிலும் இடமாற்றச் சுழற்சி செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒருங்கிணைந்த சேவைக்கு உரித்தான 07 சேவைகளிற்கு உரிய 133,963 உத்தியோகத்தர்களில் இடமாற்றத்திற்கு உட்படும் ஒரே பணியிடத்தில் 05 ஆண்டு கால சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த 14,323 உத்தியோகத்தர்களில் 2023 ஆம் ஆண்டின் போது இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் 3,916 இடமாற்றங்களிற்காக மாத்திரமே இடமாற்ற உத்திரவு வழங்கப்பட்டிருந்தது. | இடமாற்றம் வழங்கப்படுகையில் புவியியல் இருப்பிடம், அங்கீகரிக்கப்பட்ட நிதிப் பிரதி பலன்கள், ஏனைய பிரதிபலன்களும் சலுகைகளும், தகுதிக்கான ஆகக் குறைந்த அளவு சேவைக் காலம், ஏதேனும் ஓர் பணியிடத்தில் கடமையாற்றுவதற்காக வழங்கப்படும் ஆகக் கூடுதலான காலம், உத்தியோகத்தருக்கு உள்ள சிரமம் போன்று மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பாக உத்தியோகத்தருக்கு எதிரான நடவடிக்கைகள், நிறுவனத்தின் அமைவிடமாற்றத்தின் காரணமாக உத்தியோகத்தர் பாதிப்பிற்கு உட்பட்டிருத்தல், கடமைத் தேவைப்பாட்டின் நிமித்தம் ஏற்ற உத்தியோகத்தர் தேர்ந்தெடுத்தல் போன்ற பல விடயங்கள் கருத்திற்கொள்ளப்படும்.<br><br>இந்த காரணிகளின் அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட பணியிடத்தில் 05 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய ஒரு அதிகாரியை இடமாற்றம் செய்ய முடியாததுடன், மேலும் சில நிறுவனங்களின் தலைவர்களால் சேவை தேவைப்பாடுகள் காரணத்தினால் தடுத்துவைத்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, மேற்கொள்ளப்பட்டது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்படுகையில் கருத்திற்கொள்ளப்படும் நிர்ணயங்கள் குறித்து 2022 நவம்பர் 29 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் அரசாங்க அதிபர்களது பதவிக்காகத் தேர்ந்தெடுக்கும் நிர்ணயங்களை மீளத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு வழங்கும் படி ஓர் குழு நியமிக்கப்பட வேண்டியதாக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய 2022 திசெம்பர் 02 ஆம் திகதி மூன்று உத்தியோகத்தர்கள் அடங்கிய ஓர் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் புதிய தீர்மானம் எடுக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்படுகையில் கருத்திற்கொள்ளப்படும் நிர்ணயங்கள் தயாரிக்கப்படுவதற்காக 2022.12.02 ஆம் திகதி 03 உத்தியோகத்தர்கள் அடங்கிய ஓர் குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அக் குழுவினால் தயாரிக்கப்பட்ட புதிய நிர்ணயங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட முன்னர் 2022.12.27 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைகள் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக நிர்ணயங்களை சமர்ப்பிக்க இயலாது போயிற்று என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். | அரசாங்க அதிபர்களது நியமிப்பிற்கான புதிய நிர்ணயங்களை விரைவாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும். |
| (இ) | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 526,658 தொகையும் கடமையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 702,464 தொகையுமான கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. | இக் கடன் மீதிகளை விரைவாக அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | கடன் மீதிகளை விரைவாக அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |